யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

FWC

# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | வணிகக்கல்வி – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்:-

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

01) (i) (அ) உற்பத்திகளை பிரதானமாக பொருட்கள், சேவைகள் என வகைப்படுத்தினாலும் இவற்றுக்கு மேலாக காணப்படும் நான்கு வகைப்படுத்தல்களைப் பெயரிடுக.
(ஆ) வணிகச் செயன்முறையின் உள்ளீடுகள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(ii) (அ) வணிகமொன்றில் அக்கறை காட்டும் தரப்பினர்களைக் குறிப்பிட்டு, அத்தரப்பினர்கள் தொடர்பாக வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்புக்களையும் தனித்தனியாக விளக்குக.
(ஆ) சேவைகளின் நான்கு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) (அ) அரசாங்கமொன்றின் நான்கு பொருளாதார நோக்கங்களைக் குறிப்பிடுக.
(ஆ) அரசாங்கமொன்றின் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு வணிக சமூகத்தின் பங்களிப்புக்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) வணிகங்களினால் சமூகப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டிய தரப்பினரைக் குறிப்பிட்டு, அத்தரப்பினர் தொடர்பாக வணிகம் நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்புக்களை சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(v) (அ) நுகர்வோர் பாதுகாப்பு என்பதனால் கருதப்படுவது யாது என்பதை விளக்குக.
(ஆ) நுகர்வோர் பொறுப்புக்கள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
(20 புள்ளிகள்)

02) (i) (அ) இலங்கை தரச் (SLS) சான்றிதழை பெற்றுக்கொள்வதில் உற்பத்தியாளர்கள் அதிகளவு ஆர்வம் காட்டுகின்றனர் என்பதற்கான நான்கு காரணங்களை விளக்குக.
(ஆ) தனது உற்பத்திப் பொருளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு அமைப்பின் உள்ளே ஓர் உற்பத்தியாளர் பின்பற்றக்கூடிய நான்கு செயல் நெறிகளை விபரிக்குக. (4 புள்ளிகள்)

(ii) பங்குடைமை வணிகங்களின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் தனியுடைமை வணிகங்களின் அனுகூலங்களுடனும் பிரதிகூலங்களுடனும் ஒத்துக் காணப்பட்டாலும் சில பாரிய அனுகூலங்கள் பங்குடைமை வணிகத்துக்கு மட்டும் உரியனவாகும்.
(அ) இந்த இரு வகை அமைப்புக்களுக்குமிடையிலான ஒத்த இயல்புகளைக் கூறுக.
(ஆ) தனியுடைமை வணிகத்துடன் ஒப்பிடும்போது பங்குடைமை வணிகத்தில் இருந்து மட்டும் பெற்றுக்கொள்ளக்கூடிய நான்கு அனுகூலங்களை விபரிக்குக. (4 புள்ளிகள்)

(iii) (அ) ஒரு வணிக நிறுவன வடிவம் என்ற வகையில் கூட்டுறவுகளின் விசேட குணாம்சங்கள் நான்கைத் தருக.
(ஆ) கூட்டுறவுச் சங்கமொன்றைப் பதிவு செய்யும்போது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் யாவை? (4 புள்ளிகள்)

(iv) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்று வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை விளக்குக. (4 புள்ளிகள்)

(v) (அ) உம்மிடம் ரூபா 3 மில்லியன் சேமிப்பு உண்டு எனக் கொள்க நீர் பின்வரும் இரண்டு மாற்றுவழி முதலீட்டு வாய்ப்புக்களை ஆராய்கின்றீர்.
(1) நிலையான வைப்பில் முதலிடுவது
(2) கம்பனிப் பங்குகளில் முதலிடுவது
மேலுள்ள முதலீட்டு வாய்ப்புக்களுள் ஒன்றைத் தெரிவு செய்வதில் நீர் கருத்திற் கொள்ளும் நான்கு காரணிகளை விளக்குக.
(ஆ) வணிக முயற்சிகளுக்காக அரசினால் வழங்கப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
(20 புள்ளிகள்)

03) (i) (அ) முயற்சியாண்மை அபிவிருத்திக்கூடாக பெறக்கூடிய சமூக பொருளாதார நன்மைகள் நான்கு தருக.
(ஆ) முயற்சியாளர் மற்றும் உள்ளக முயற்சியாளர் என்பவற்றுக்கிடையே காணப்படும் தொடர்பினைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(ii) (அ) ஒரு நாட்டிலே சிற்றளவு வணிகங்களின் வெற்றிக்கு அவசியமான நான்கு காரணிகளை விளக்குக.
(ஆ) உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கும் இடையிலான இரண்டு ஒற்றுமைகளையும் இரண்டு வேற்றுமைகளையும் குறிப்பிடுக.
(4 புள்ளிகள்)

(iii) (அ) அலகுப் பொறுப்பாட்சி நிறுவனமொன்றிலிருந்து ஓர் நிதிக்கம்பனி எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை விளக்குக.
(ஆ) புறக்குறிப்பிடல், குறுக்குக் கோடிடல் என்றால் என்ன என்பதை விபரிக்குக. (4 புள்ளிகள்)

(iv) ‘‘வணிக நிறுவனங்களின் வெற்றிக்கு மத்திய வங்கியின் கருமங்கள் அத்தியாவசியமானதாகும்’’ இக்கருத்தை விளக்குக. (4 புள்ளிகள்)

(v) விபத்துக்களினால் ஏற்படும் சேதங்களில் கூட்டாக பங்கு கொள்ளல் காப்புறுதியின் பணியாகும்.
(அ) ஒருவருக்கு ஏற்படும் இழப்பு காப்புறுதியின் மூலம் எவ்வாறு ஒரு தொகுதியினர் மத்தியில் பங்கிடப்படுகிறது?
(ஆ) காப்புறுதி முக்கியமாக தேவைப்பாடுடையது என்பதற்கான நான்கு காரணங்களினை விளக்குக. (4 புள்ளிகள்)
(20 புள்ளிகள்)

04) (i) (அ) மோட்டார் வாகன காப்புறுதிப் பத்திரம் தொடர்பில் ‘‘ஈடுகோரப்படாத மிகை ஊதியம்’’ (NOCLAIM BONNS) என்பதன் கருத்தை விளக்குக.
(ஆ) இலங்கையில் தெருப்போக்குவரத்து பிரபல்யம் அடைந்து செல்வதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(ii) போக்குவரத்து அமைப்பொன்றின் அடிப்படை அம்சங்களைக் குறிப்பிட்டு உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) (அ) இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்தும் தொடர்பாடல் பெருமளவில் பிரசித்தி பெற்று விளங்குகிறது. இதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.
(ஆ) வர்த்தக நன்மைக்காக மொத்த வியாபாரியினால் வழங்கப்படும் நான்கு சேவைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவதன் மூலம் ஒரு நாடு அடையக்கூடிய நான்கு பிரதான நன்மைகளை விளக்குக. (4 புள்ளிகள்)

(v) (அ) சட்டமுறைப் பணத்திலிருந்து இலத்திரனியல் பணம் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை விளக்குக.
(ஆ) வணிகக் கொடுக்கல் வாங்கல்களில் இலத்திரனியல் வர்த்தகம் இடம்பெறக்கூடிய நான்கு முறைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
(20 புள்ளிகள்)

## பகுதி - II


05) (i) முகாமைத்துவம் நிறுவனத்தின் இலக்கினை பயனுறுதிமிக்கதாகவும் திறமையாகவும் அடைவதற்கு உதவுகின்றது.

(அ) நிறுவனம் ஒன்றிற்கு முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக.

(ஆ) வினைத்திறன், விளைதிறன் என்றால் என்ன என்பதனை விபரிக்குக. (4 புள்ளிகள்)

(ii) (அ) ஒரு பயனுறுதி வாய்ந்த கட்டுப்பாட்டு முறைமையின் (Effective Controlling System) பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) பின்வரும் அட்டவணையானது திட்டமிடல் செயன்முறை தொடர்பான சில படிமுறைகளைக் காட்டுகிறது.




$A, B, C, D$ ஆகியவற்றிற்கான மேற்குறிப்பிட்டுள்ள செயன்முறையின் படிமுறைகளை உமது விடைத்தாளில் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) செயற்பாட்டு இடஅமைவுத் திட்டமிடல் மூலம் கிடைக்கக்கூடிய நான்கு அனுகூலங்களை விபரிக்குக. (4 புள்ளிகள்)

(iv) (அ) ஊழியர்களை ஊக்குவிப்பதற்குத் தூண்டும் நிதி சாராத ஊக்குவிப்பு முறைகள் நான்கைக் குறிப்பிடுக.

(ஆ) நிறுவனங்கள் தமது ஊழியர்களின் உற்பத்தித்திறனை அபிவிருத்தி செய்து கொள்ளக்கூடிய முறைகள் நான்கை சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(v) நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன்மூலம் நிறுவனம் பெற்றுக் கொள்ளக்கூடிய நான்கு அனுகூலங்களை எழுதுக. (4 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

06) (i) (அ) உற்பத்தியாளர் ஒருவர் தனது உற்பத்திப் பொருளுக்கான விலைகளை நிர்ணயித்தல் மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கும் நான்கு குறிக்கோள்களை குறிப்பிடுக.

(ஆ) மேம்படுத்தல் கலவையில் உள்ளடக்கப்படும் பிரதான மாறிகள் யாவை? (4 புள்ளிகள்)

(ii) (அ) சந்தைத் துண்டமாக்கல், இலக்குச் சந்தை என்றால் என்ன என்பதனை விபரிக்குக.

(ஆ) சந்தைப்படுத்தலில் மிக முக்கியமான ஆளாகக் கருதப்படுபவர் யார்? ஏன் என விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) சந்தைப்படுத்தல் எண்ணக்கருவுக்குப் (Marketing Concept) பொருத்தமான பிரதான காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு அக்காரணிகள் வணிகத்தின் வெற்றியில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை விளக்குக. (4 புள்ளிகள்)

(iv) (அ) ஒரு நாட்டின் பங்குச் சந்தையின் முக்கியத்துவம் தொடர்பில் நீர் வலியுறுத்திக் கூறக்கூடிய நான்கு காரணிகளை எழுதுக.

(ஆ) முதலாம் தர பங்குச் சந்தைக்கும் இரண்டாம் தர பங்குச் சந்தைக்குமிடையிலான இரண்டு வேறுபாடுகளை தெளிவுபடுத்துக. (4 புள்ளிகள்)

(v) (அ) காசு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு அனுகூலங்களைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) ''உரித்து வழங்கல்'' என்பதனால் கருதப்படுவது யாது என்பதை விபரிக்குக.

(4 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

07) (i) (அ) நவீன வணிகத்தின் ஒரு பொதுவான சிறப்பம்சம் சிறப்புத் தேர்ச்சி ஆகும். சிறப்புத் தேர்ச்சியின் இரண்டு அனுகூலங்களையும் இரண்டு பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

(ஆ) ஒரு பங்குதாரர் தொடர்பில் சாதாரண பங்குகள் மற்றும் முன்னுரிமைப் பங்குகளுக்கிடையிலான நான்கு வேறுபாடுகளை விளக்குக. (4 புள்ளிகள்)

(ii) (அ) ஒரு சந்தைப்படுத்தல் கருவி என்ற முறையில் நேரடி விற்பனை முறையின் முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றது. இப்போக்குக்கான நான்கு காரணங்களை விளக்குக.

(ஆ) வணிக நிறுவனமொன்றிற்கு எந்த இரு பிரதான நோக்கங்களுக்கு நிதி தேவைப்படுமெனக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) மனிதவள முகாமைத்துவத்தின் நான்கு முக்கியமான சிறப்பு நோக்கங்களைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(iv) (அ) ஊழியரொருவரின் ''தகுதி காண்காலம்'' என்றால் என்ன என்பதனை விபரிக்குக.

(ஆ) தகுதிகாண் காலத்தினுள் ஊழியரொருவரின் நிறைவேற்றம் திருப்திகரமாக இல்லாத பொழுது தொழில் வழங்குநர் அவருக்கு எதிராக எடுக்கக்கூடிய நான்கு நடவடிக்கைகளைக் கூறுக. (4 புள்ளிகள்)

(v) (அ) தொழில் வழங்குநர் தொழில் பெறுநர் ஆகியோருக்கு இடையிலான பொருத்தமற்ற ஊழியர் உறவின் காரணமாக நிறுவனமொன்றுக்கு ஏற்படக்கூடிய நான்கு பிரதிகூலங்களை எழுதுக.

(ஆ) ஆட்சேர்ப்பின் இரண்டு அகமூலங்களையும் இரண்டு புற மூலங்களையும் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

08) (i) (அ) சிறந்த தகவலொன்றில் காணப்படும் பண்புகள் நான்கைக் குறிப்பிடுக.

(ஆ) பயன்பாட்டினடிப்படையில் தகவல் முறைமையின் வகைகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

(ii) தகவல் முறைமையொன்றின் அடிப்படைக் கருமங்களை விபரிக்குக. (4 புள்ளிகள்)

(iii) (அ) ''உள்ளூர்ப் பரப்பு வலையமைப்பு (LAN)'' ''பெரும்பரப்பு வலையமைப்பு (WAN) ஆகியவற்றை விபரிக்குக.

(ஆ) இணையத்தின் மூலம் பெறக்கூடிய நான்கு சேவைகளைச் சுருக்கமாக விளக்குக.

(4 புள்ளிகள்)

(iv) (அ) வணிகத்திட்டமிடல் ஒன்றில் உள்ளடங்கப்பட வேண்டிய பகுதிகள் யாவை?

(ஆ) சந்தைப்படுத்தல் திட்டம் ஒன்றிற்கான ''சந்தைப்படுத்தல் உபாய வழிமுறையின் போது'' கருத்திற் கொள்ள வேண்டிய நான்கு தகவல் உருப்படிகளைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(v) (அ) நிதித்திட்டமொன்றில் உள்ளடக்க வேண்டிய நான்கு தகவல் உருப்படிகளைக் குறிப்பிடுக.

(ஆ) காசுப் பாய்ச்சற் கூற்றொன்றில் காசு வெளிப்பாய்ச்சலுக்கான நான்கு உதாரணங்களை எழுதுக. (4 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)